**இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2023**

**-----------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, நிதிகள் மீதான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21 அ வின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ∴ப்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வு விடயப்பரப்பு பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ∴ப்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 பெற வேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை

### 1.5.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய மீதிகளான ரூபா 62,576,299 மற்றும் ரூபா 11,973,738 தொகையானது முறையே 2 தொடக்கம் 5 வருடங்களாகவும் மற்றும் 05 வருடங்களிற்கு மேலாகவும் அறவீடு செய்யப்படாமல் காணப்படுகின்றது. மேலும், இழப்புக்களிற்காக நிதிக் கூற்றுக்களில் எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிலிருந்து பெற வேண்டிய கணக்குகளில் உள்ள அறவிட முடியாதவைகளை அடையாளம்கண்டு இழப்பீனை செய்ய நான் உடன்படுகின்றேன். | நிலுவைகளை மேலும் தாமதமின்றி அறவீடு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணங்கள் ரூபா 591,484 மற்றும் ரூபா 3,717,115 தொகையானது முறையே ஒன்பது வருடங்களிற்கு மேலாகவும் மற்றும் 2 தொடக்கம் 4 வருடங்களாகவும் இவ் அறிக்கைத் திகதிவரை கூட தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டது. | இதிலிருந்து, ரூபா 591,484 தொகையினை தீர்ப்பனவு செய்ய முடியாததுடன் நிறைவேற்றுக் குழுவின் அனுமதிக்கு உட்பட்டு கணக்குகளிலிருந்து அவைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணங்களினை தீர்ப்பனவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டம் மற்றும் அதன் மீது செய்யப்பட்ட திருத்தங்கள். | சம்மேளனமானது வருமான வரி நோக்கத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யவில்லை. | ஓர் தேசிய விளையாட்டுக்கள் சம்மேளனமாக, எங்கள் சம்மேளனமானது ஓர் இலாப நோக்கமற்ற நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | சம்மேளனமானது சட்ட ஏற்படுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 1990/23 இல் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டு ஒழுங்குவிதிகளின் பகுதி III இன் பிரிவு xii | ஓர் செயற்பாட்டுத் திட்டம் சம்மேளனத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அரசியல் தலையீடாக விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் சர்வதேச கால்பந்து சம்மேளனம் என்பன இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு ஓர் சர்வதேச தடையினை விதித்திருந்தது. எனவே, முந்தய ஆண்டுகளில் எவ்வித நடவடிக்கைகளினையும் செய்வதற்கு சாத்தியமற்றதாக இருந்தது. | விளையாட்டுத்துறை ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (இ) | விளையாட்டு பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்கள் இன் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட வழிகாட்டிகள். | | | |

| | | | |
|---|---|---|---|
| (i) பிரிவு 3(iii) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து தேவையான அனுமதியினை பெற்றுக் கொள்ளாமல் சம்மேளனமானது ஒன்பது (09) வங்கிக் கணக்குகளை பேணி வந்துள்ளது. | இவ் விடயமானது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்னய ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளது. | வழிகாட்டிகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ii) பிரிவு 3(iv) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 373,142,353 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்கான பௌதீக கணக்கெடுப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அரசியல் தலையீடாக விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் சர்வதேச கால்பந்து சம்மேளனம் என்பன இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு ஓர் சர்வதேச தடையினை விதித்திருந்தது. எனவே, முந்தய ஆண்டுகளில் எவ்வித நடவடிக்கைகளினையும் செய்வதற்கு சாத்தியமற்றதாக இருந்தது. | வழிகாட்டிகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 180,920,700 பற்றாக்குறையாகவும், அதற்கு முந்தைய ஆண்டில் இதற்கு நேரொத்த மிகை ரூபா 51,309,070 ஆகவும் இருந்தது. இதனால், நிதி பெறுபேறுகளில் ரூபா 232,229,770 பெறுமதியான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. 2023 சனவரி 21 இலிருந்து அமுலாகும் வன்னம் சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனத்தின் மூலம் சம்மேளனமானது தடைசெய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது எவ்வித வருமானங்களும் கிடைக்கப்பெற்றிராமையே இப் பின்னடைவிற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினங்களின் முக்கிய உருப்படிகளின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| விபரம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா | வித்தியாசங்கள் சாதகம் / (பாதகம்) ரூபா | சதவீதம் % |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| FIFA பங்களிப்பு | - | 375,931,250 | (375,931,250) | 100 |
| நிதி மற்றும் ஏனைய வருமானம் | 10,956,120 | 37,982,765 | (27,026,645) | 71 |
| வெளிநாட்டு நாணய மாற்று | - | 134,271,225 | (134,271,225) | 100 |

இலாபம்

| | | | | |
|---|---|---|---|---|
| **செலவு** | | | | |
| கால்பந்து தொடர்பான நிகழ்வுகள் மற்றும் சுற்றுத்தொடர்ச் செலவுகள் | 64,774,167 | 330,322,584 | 265,548,417 | 80 |
| செயற்பாட்டுச் செலவுகள் | 95,286,425 | 122,614,638 | 27,328,213 | 22 |
| லீக் மற்றும் கால்பந்து அபிவிருத்திச் செலவுகள் | 7,969,058 | 30,978,087 | 23,009,029 | 74 |
| சூப்பர் லீக் தொடர்பான செலவுகள் | - | 12,960,861 | 12,960,861 | 100 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | 23,847,169 | - | (23,847,169) | 100 |

இதனுடன் தொடர்புபட்டு பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.
ஆண்டின் போது FIFA பங்களிப்பு கிடைக்கப் பெற்றிராததனால், ஆரம்ப வங்கி மீதி ரூபா 295,703,306 இனை பயன்படுத்தி மீளாய்வாண்டிற்காக ரூபா 191,876,820 தொகையான மொத்தச் செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அடையாளப்படுத்தப்பட்ட நட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 சனவரி 01 தொடக்கம் 2017 ஜுலை 31 வரையான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பில் முன்னய நிதி முகாமையாளரிடமிருந்து கூட்டு மொத்தம் ரூபா 48,388,399 இணை அறவீடு செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், அவரிற்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கையின் தற்போதய நிலையானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வழக்கு இல. HC-CRM 4563/2023 இன் கீழ் இந் நிதி மோசடிக்கான ஓர் வழக்கு நீதிமன்றத்தில் ஏற்கனவே பரீட்சிப்பில் உள்ளது. | சம்மேளனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஏப்ரல் 04 இலிருந்து அமுலாகும் வன்னம் இளைஞர் விவகார அமைச்சினால் சம்மேளனத்தின் பதிவானது றத்துச்செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது சம்மேளனமானது எவ்வித வருமானம் அல்லது நன்கொடைகளை பெற்றிருக்கவில்லை. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு வருமானம் முறையே ரூபா 315,215,325 மற்றும் ரூபா 375,931,250 ஆக இருந்தது. மேலும் முன்னய ஆண்டிற்கான மிகை ரூபா 51,309,071 உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு குறை ரூபா 180,920,700 ஆக | 2023 சனவரி 21 இலிருந்து அமுலாகும் வன்னம் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் இடைநிறுத்தம் காரணமாக, FIFA அல்லது AFC இனால் எவ்வித நிதிகளும் சம்மேளனத்தின் வங்கி கணக்குகளிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சம்மேளனத்தின் இடைநிறுத்தத்தினை தடுக்க திருத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இருந்தது. மேலும், இந் நிலைமையானது சம்மேளனத்தின் செயற்பாடு மற்றும் நாட்டில் கல்பந்து விளையாட்டின் விரிவாக்கம் என்பனவற்றை மோசமாக பாதித்திருந்தது.